d **மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 73 / 2023**

**2025ம் வருடம் நவம்பர் மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு. பிச்சைமுத்து என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **செட்டி** | த/பெ | **வடுகநாதன்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.1
2. பார்வை மகஜர் இணையதள நகல் ம.சா.ஆ.2
3. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.3
4. 4வது மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.4
5. குற்ற இறுதி அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.5
6. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்று இணையதள நகல் ம.சா.ஆ.6

7. 1வது எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் இணையதள நகல் ம.சா.ஆ.7

8. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு இணையதள நகல் ம.சா.ஆ.8

9. விபத்து பதிவேடு இணையதள நகல் ம.சா.ஆ.9

10. பிரேத பரிசோதனை அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.10

11. பஞ்சவர்ணம் இறப்புச் சான்று இணையதள நகல் ம.சா.ஆ.11

12. பஞ்சவர்ணம் வாரிசு சான்று இணையதள நகல் ம.சா.ஆ.12

13. பட்டா எண் 1102 மற்றும் 1320 இணையதள நகல் ம.சா.ஆ.13

14. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.14 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

15. 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.15 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

16. 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.16 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

17. 4ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.17 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

18. 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் வா.சா.ஆ.18 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

19. 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் வா.சா.ஆ.19 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

20. 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் வா.சா.ஆ.20 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

21. 4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் வா.சா.ஆ.21 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

22. 1ம் மனுதாரரின் வருமான வரி அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.22 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

23. 2ம் மனுதாரரின் வருமான வரி அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.23 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

24. 3ம் மனுதாரரின் வருமான வரி அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.24 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

25. 4ம் மனுதாரரின் வருமான வரி அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.25 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எனது மகள் 4ம் மனுதாரர் ஜெயபாரதிக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது மனைவி பின்னால் அமர்ந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். விபத்து நடந்த சாலை கோட்டையூரிலிருந்து வழக்காணி செல்லும் சாலை ஆகும். நான் விபத்து சமயத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தேன். நான் இந்த விபத்து சம்மந்தமான போலீசாரின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், போலீசாரின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் என்மீது உள்ள தவறு தெரிந்துவிடும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற

போது கவனக்குறைவாக சாலையின் வலது புறமாக ஏறிச்சென்று எதிரிகள் வந்த 1வது எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும் அதன் காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த மனுவில் சேர்க்காததால் இந்த மனு அவசிய தரப்பினை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரும் அதன் காப்பீடு நிறுவனமும் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன் எனது மனைவி தலைக்கவசம் அணியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது மனைவி தலைக்காயத்தினால் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது அதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஆய்வின் போது எனது ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 மனுதாரர்கள் திருமணமாகி அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால்

சரிதான். 2வது மனுதாரர் விவசாய வேலை செய்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ல் எனது மனைவி பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் விவசாய வேலை செய்து வந்தேன் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. எனது மனைவி எந்த வேலையும் பார்க்கவில்லை எனது பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எனது மனைவி விவசாய வேலை செய்து வந்ததாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவியின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அடிப்படை ஆதாரமின்றி இந்த வழக்கில் நான் அதிக இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**